தமிழ் நாடு சட்டமன்ற மேலவை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட சட்டமன்ற மேலவையின் அறுபத்தைந்தாவது கூட்டத் தொடர்.

வெள்ளிக்கிழமை, 1984 மார்ச் 23.

(பங்குனி 10, ருத்ரோத்தாரி—திருவள்ளுவராண்டு 2015.)

(இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான, தமிழ் நாடு சட்டமன்ற மேலவையின் அறுபத்தைந்தாவது கூட்டத் தொடர்).

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில், முற்பகல் 10.00 மணியளவில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினா எண்கள் 103, 104 இரண்டும் சேர்த்து எடுத்துக் கொள்ளப்படலாம்.

Post-Graduate Assistants.

*103. *Q.*—Thiru P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state :

(*a*) whether it is a fact that Post-Graduate scale of pay has not been given from 11th July 1979, to Post-Graduate Assistants serving from that date in Government Higher Secondary Schools (Vocational Stream), as per G.O. Ms. No. 1091, Education, dated 15th June 1978; and

(*b*) if so, the reasons for the same ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (இ).—அரசு ஆணைப்படி மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற் கல்வி பிரிவுகளுக்கு பகுதி நேர ஆசிரியர்களே நியமிக்கப்படுகின்றனர். மேலும் தொழிற் கல்வி ஆசிரியர்களுக்கு முதுகலைப்பட்டம் தேவையென ஆணையிடப்படவில்லை. முன்னாள் உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றிவந்த இருமுனைப்பாட (Bifurcated Course) ஆசிரியர்கள் மட்டும் மேல்நிலைப் பள்ளிகளில் முழுநேர ஆசிரியர்களாகப் பணியாற்ற அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் உயர்நிலைப்

பள்ளிகளில் பெற்று வந்த சம்பளத்தோடு மாதம் ரூபாய் 40 சிறப்பூதியம் பெற்று வருகின்றனர். தொழிற்கல்வி ஆசிரியர்களுள் முதுகலைப் பட்டம் பெற்றவர்கள் இதர முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு அரசு ஆணை 1091, கல்வி, நாள் 15—6—1978-ன்படி அளிக்கப்பட்டு வரும் சம்பள விகிதத்தைப் பெற வாய்ப்பில்லை.

*104. வினா—திரு. பா. ரா. தாமஸ் (திரு. செ. முத்துசாமி சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் 8—2—1982-ல் மாவட்டத் தலைநகர்களில் ஊர்வலம் நடத்தி, முதன்மைக் கல்வி அலுவலர், மாவட்ட ஆட்சியாளர் ஆகியோர் மூலம் தங்கள் சங்கக் கோரிக்கைகளை அரசுக்கு அனுப்பியுள்ளார்கள் என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அவற்றின்மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(இ) அவர்கள் அளித்த 8 கோரிக்கைகளையும் பரிசீலனை செய்து தக்க மேல்நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

திரு. பா. ரா. தாமஸ்: மாண்புமிகு தலைவர் அவர்களே, வாழ்க்கைத் தொழில் முறைக் கல்வி தொடர்பான பாடத்தைப் பயிற்றுவிக்கிற முதுநிலைப் பள்ளியாசிரியர்களுக்கு முதுநிலை ஆசிரியர்களுக்கான ஊதியம் வழங்கப்பட வேண்டும். அலைடு சப்ஜெக்டுகள் வொக்கேஷனல் கோர்ஸில் கற்பிக்கப்படும்போது, போஸ்ட்கிராஜுவேட் ஆசிரியர்களுக்குச் சமமான ஊதியத்தைக் கொடுக்க வேண்டுமென்று ஆணை உருவாக்கலாம் அல்லவா, இதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்லதொரு ஆணையை வழங்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, தொழிற் கல்வி ஆசிரியர்களுக்கு முதுகலைப் பட்டம் தேவையென்று அரசு சொல்லவில்லை. ஆகவே இந்தப் பிரச்சினை எழவில்லை.